<u>சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு</u>

<u>வாக்குமூல படிவம்</u>

<u>OS. No.84/2017</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுப்பிரமணி | வா.சா. | : | 1 |
| த/க/பெயர் | : | சின்னுசாமி | தொழில் | : | ஓட்டுநர் |
| ஊர் | : | மாச்சம்பாளையம் | தாலுக்கா | : | திருச்செங்கோடு |
| வயது | : | 55 | நாள் | : | 21.09.2022 |

<u>சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.</u>

<u>குறுக்கு விசாரணை</u>

எனது தகப்பனார் பெயர் சின்னுசாமி. சுமார் 15 வருடங்களுக்கு முன்பு எனது தகப்பனார் இறந்துபோய்விட்டார். எனது தகப்பனார் சின்னுசாமிக்கு ரத்தினம், பாப்பாத்தி, மணிமுத்து மற்றும் நான் ஆகியோர்கள் மக்கள். ரத்தினத்தின் மனைவி தான் பிரதிவாதி கன்னியம்மாள். சுமார் 12 வருடங்களுக்கு முன்பு ரத்தினம் இறந்துபோய்விட்டார். சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சொத்து ஆதியில் யாருக்கு எந்த வகையில் பாத்தியம் என்பது குறித்து சொல்லியுள்ளோமா என்று கேட்டால் சொத்து எனது தகப்பனாருக்கு தான் பாத்தியம். எங்களது பிராது மற்றும் எனது நிருபணவாக்குமூலத்தில் தாவா சொத்து ஆதியில் எனது தகப்பனாருக்கு பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்து நத்தம் மனை என்றால் சரிதான். நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பிராது சொத்து விவரத்தில் தாவா சொத்து நத்தம் என்று குறிப்பிடவில்லையென்றால் இல்லை. எனது நிருபணவாக்குமூலத்தில் தாவா சொத்து நத்தம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பட்டா எண்.79க்கான நத்தம் பட்டா தான் தாவா சொத்திற்குண்டானதாகும். அந்த நத்தம் பட்டா பி.சா.ஆ.1 ஆகும். பி.சா.ஆ.1 பட்டாவானது ரத்தினம் மற்றும் சின்னுசாமி பெயரில் உள்ளது. முதலில் பட்டா எனது தகப்பனார் பெயரில் தான் இருந்தது. பின்னிட்டு பிரதிவாதி தரப்பினர் பட்டாவில் பெயரை சேர்த்துக்கொண்டார்கள். பட்டா வழங்கப்பட்ட தேதியிலிருந்து சின்னுசாமி பெயரிலும், ரத்தினம் பெயரிலும் தான் இருந்து வந்தது என்றும், வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் தவறு. பட்டாவை தாக்கல் செய்தால் உண்மை நிலவரம் தெரியவந்துவிடும் என்பதால்தான் அதனை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் பட்டா என்னிடம் இல்லை, அதனால் தாக்கல்

செய்யவில்லை. தாவா சொத்து நத்தம் என்று பிராதில் குறிப்பிட்டால் பட்டா கேட்பார்கள் என்பதால் நத்தம் என்று பிராதில் குறிப்பிடாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் தவறு. சுமார் 7 வருடங்களுக்கு முன்பு தான் நத்தம் பட்டா ரத்தினம் பெயரிலும் இருந்து வந்தது எனக்கு தெரியவந்தது. பட்டா குறித்து ஊர்க்காரர்களை வைத்து பிரதிவாதிகளிடம் பேசிபார்த்தோம் சுமூக முடிவுகள் எதுவும் எட்டவில்லை. அதனால் ஊர்க்காரர்கள் சொல்லிதான் வழக்கு தாக்கல் செய்தோம். ரத்தினம் பெயரை பட்டாவிலிருந்து நீக்கம் செய்வதற்கு வருவாய் துறையில் நடவடிக்கை எதுவும் நான் எடுக்கவில்லை. ரத்தினம் பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்யவேண்டுமென்று வழக்கில் பரிகாரம் கோரியுள்ளேன். அவ்வாறு நான் இந்த வழக்கில் பரிகாரம் கோரவில்லையென்றும், தற்பொழுது வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் தவறு. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே ரத்தினம் பெயரிலும் பட்டா உள்ளது எனக்கு தெரியும் என்றும், அதனை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் தவறு. ரத்தினம் பெயரில் பட்டா இருந்தது தெரிந்து தான் நான் வழக்கு தாக்கல் செய்தேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் ரத்தினம் பெயரில் பட்டா இருப்பதை குறிப்பிடாமல் மறைத்துள்ளேன் என்றால் தவறு. தாவா சொத்தில் என்னுடைய வீடுகள் உள்ளது. நான் குடியிருக்கும் வீட்டின் கதவு எண்.2/17, பிரதிவாதி குடியிருக்கும் வீட்டின் கதவு எண்.2/18. என்னிடம் காட்டப்படும் வீட்டுவரி ரசீது பிரதிவாதி கன்னியம்மாள் பெயரில் உள்ளது ஆகும். வீட்டுவரி ரசீதுகளின் கோர்வை பி.சா.ஆ.2 ஆகும். என்னிடம் காட்டப்படும் ரசீதானது ரத்தினம் பெயரில் உள்ள மின் கட்டண ரசீது ஆகும். அந்த மின் கட்டண ரசீது பி.சா.ஆ.3 ஆகும். 2008 ம் வருடமே வீட்டுவரி கன்னியம்மாள் பெயரில் மாற்றப்பட்டுவிட்டது என்றும், அது குறித்து அப்பொழுதே எனக்கு தெரியும் என்றும் அதனை மறைத்து நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. நான் தாவா சொத்தில் குடியிருக்கும் 2/17 வீட்டிற்கு மட்டும் வரி செலுத்திவருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள கதவு எண்.2/18 வீட்டிற்கு பிரதிவாதி வரி செலுத்திவருகிறார். கதவு எண்.2/18 வீடானது ரத்தினத்திற்கு பாத்தியப்பட்டு அவர் அனுபவித்து வந்து வீட்டுவரி மற்றும் மின் கட்டணம் செலுத்திவந்தார் என்றும், அதனால் தான் அந்த வீட்டிற்கு நான் வீட்டுவரி மற்றும் மின் கட்டணங்களை

செலுத்தவில்லையென்றும், அதனை மறைத்து பொய்யாக நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. கதவு எண்.2/17 வீட்டிற்கான மின் கட்டண ரசீது மற்றும் வீட்டுவரி ரசீதுகள் தான் வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 என்றால் சரிதான். சொத்து பொது சொத்து என்று சொல்லும் நிலையில் எவ்வாறு கதவு எண்.2/17 வீட்டிற்கு என் பெயரில் தனிப்பட்ட முறையில் வீட்டுவரி மற்றும் மின் இணைப்பு பெறப்பட்டது என்று கேட்டால் எனது தகப்பனார் இறந்த பின்னிட்டு நான் குடியிருந்த வீட்டிற்கு வீட்டுவரி மற்றும் மின் இணைப்பு ஆகியவைகளுக்கு எனது பெயரை சேர்த்துக்கொண்டேன். கதவு எண்.2/17 வீடானது பொது சொத்து என்பது நன்கு தெரிந்தும் பிரதிவாதியை ஏமாற்றுவதற்காக வேண்டுமென்றே அந்த வீட்டிற்கு எனது பெயரில் வீட்டுவரி மற்றும் மின் இணைப்பு மாற்றிக்கொண்டேன் என்றால் தவறு. எனது தாயாரின் உதவியுடன் பிரதிவாதி ரத்தினத்தை திருமணம் செய்துகொண்டார் என்று எதற்காக பிராதில் குறிப்பிட்டுள்ளோம் என்று கேட்டால் பெற்றோர்கள் தான் திருமணம் செய்துவைத்தார்கள் என்பதற்காக சொல்லியுள்ளோம். பிரதிவாதிக்கும், ரத்தினத்திற்கும் நடந்த திருமணம் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்டு நடைபெற்ற திருமணம் ஆகும். கதவு எண்.2/18 வீட்டில் தான் பிரதிவாதியும், அவரது குழந்தைகளும் தற்பொழுது வரை குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு வேறு சொத்துக்களோ, வீடோ இல்லையென்றால் தெரியாது. தாவா சொத்தை விற்பனை செய்வதற்காக பிரதிவாதி முயற்சி செய்தார். சொத்தை விற்பனை செய்ய முயற்சி செய்தது எவ்வாறு எனக்கு தெரியும் என்று கேட்டால் தெரியும், எவ்வாறு தெரியும் என்று சொல்ல இயலாது. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும், வீட்டை விற்க வேண்டிய அவசியம் பிரதிவாதிக்கு இல்லையென்றும், வீட்டை விற்பனை செய்ய பிரதிவாதி முயற்சிக்கவில்லையென்றும் சொன்னால் தவறு. எனது சகோதரர் ரத்தினம் இறந்தபின்னிட்டு எனக்கும், பிரதிவாதிக்கும் வீடு சம்மந்தமாக பிரச்சினை இருந்து வருகிறது. அதனால் எனக்கும், பிரதிவாதிக்கும் பேச்சுவார்த்தை இல்லை. நான் வாதிகள் அனைவருக்கும் சேர்த்து தான் நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். மற்ற வாதிகள் வாய்மொழி சாட்சியமளிப்பார்களா என்று கேட்டால் நான் மட்டும் தான் வாய்மொழி சாட்சியமளிப்பேன். நாங்கள் எவ்வளவு பாகங்கள் வேண்டும் என்று கேட்டோம் என்றால்

தலா 1/5 பாகம் வேண்டுமென்று கேட்டுள்ளோம். தாவா சொத்து நத்தம் பட்டா நிலம் என்பதாலும், தாவா சொத்திற்கு எனது சகோதரர் பெயரிலும் பட்டா உள்ளதாலும், 1/5 பாகம் வழங்க இயலாது என்றும் சொன்னால் தவறு. எங்களது வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் தவறு. பாகத்தை பிரித்துக்கொடுக்க கோரி பிரதிவாதியை நான் நேரடியாக கேட்டேனா என்று கேட்டால் ஊர்க்காரர்களை வைத்து கேட்டேன். ஊர்க்காரர்கள் யார் என்று கேட்டால் பழனிசாமி மற்றும் மணி ஆகியோர்கள் ஆவார்கள். பழனிசாமி மற்றும் மணி ஆகியோர்கள் இறந்துபோய்விட்டார்கள். அவ்வாறு நான் ஊர்க்காரர்களை வைத்து பாகம் பிரித்து கொடுக்க வேண்டும் என்று கேட்கவில்லையென்று சொன்னால் தவறு. எனக்கும், ரத்தினத்திற்கும் 15 வருடம் வயது வித்தியாசம் உள்ளது. ரத்தினம் கூலி வேலைக்கு சென்று சம்பாதித்து வீடு கட்டுவதற்கு உதவி செய்தார் என்றும், அதனால் தான் ரத்தினம் பெயரிலும் பட்டா கூட்டாக வந்தது என்றும் சொன்னால் தவறு. 1968ம் வருடம் வீடு கட்டப்பட்டது. அப்பொழுது நான் குழந்தையாக இருந்தேன். எனது சகோதரர் ரத்தினம் 10ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தார். தாவா சொத்திற்கு ரத்தினம் பெயரில் நத்தம் பட்டா கொடுக்கப்பட்டுள்ளதால் அவரது சொத்தை பொறுத்து பாகம் கோர இயலாது என்று சொன்னால் தவறு. எனது தகப்பனார் ஆவணங்கள் எதுவும் எழுதி வைக்காமல் இறந்துபோய்விட்டதால் அவரது சொத்தை பொறுத்து மட்டும் தான் நான் பாகம் கோர முடியும் என்று சொன்னால் தவறு. ரத்தினத்திற்கு பிரதிவாதி கன்னியம்மாள், பிரியங்கா என்ற மகள் மற்றும் கார்த்தி என்ற மகன் ஆகியோர்கள் வாரிசுகள். பிரியங்கா மற்றும் கார்த்தி ஆகியோர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்திற்காக வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் தவறு. நத்தம் பட்டாவை வழக்கில் தாக்கல் செய்தால் உண்மை நிலவரம் தெரியவந்துவிடும் என்பதற்காக ஒரு பொய்யான அறிவிப்பை அனுப்பி அதனடிப்டையில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் தவறு. நத்தம் பட்டாவிற்கு நகல் வாங்க முடியுமென்றால் சரிதான். உண்மை சங்கதிகளை மறைத்து தவறான சொத்துவிவரங்கள் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் தவறு. எனது தகப்பனாருக்கு மட்டும் பாத்தியப்பட்ட

சொத்தை பொறுத்து மட்டும் பாகம் பிரித்துக்கொள்ள பிரதிவாதி தயாராக உள்ளார் என்றும், ஆனால் உரிய தரப்பினர்களை சேர்க்காததாலும் சொத்து விவரம் தவறாக உள்ளதாலும் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் சொன்னால் தவறு. எங்களது வழக்கிற்கு வழக்குமூலம் எதுவும் ஏற்படவில்லையென்றால் தவறு. வழக்கில் கோரிய பரிகாரங்கள் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் தவறு.

Sd/-

Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct.

Sd/.V.Suresh,

Subordinate Judge,

Tiruchengode.